பூமி

பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்

மலர்.01 - இதழ்.01 - மே, 2025 - காலாண்டிதழ்


# BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL (BIRJT)


Volume 01 – Issue 01 – May 2025 – Quarterly






An international open access, peer- reviewed, Online Multi – disciplinary Tamil refereed journal

Email: boomiirjt@gmail.com
www.boomiirjt.com

# பூமி பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்

**மே, 2025**


| கட்டுரை | ஆசிரியர் | கட்டுரை எண் | பக்கம் |
|---|---|---|---|
| அன்னிமகன் நாடகத்தில் விழாக்கள் | முனைவர் சு. இளமாறன் | BIRJT250001 | 01-5 |
| செவ்விலக்கியத்தில் நாட்டுப்புற மக்களின் தொழில்கள் | முனைவர் உமா சங்கரி. பா | BIRJT250002 | 06-11 |
| பெண்ணுடல் அரசியலும் பாலியல் வெளிப்பாடும் (கவிஞர் சசிகலா பாபு-வின் கவிதைகளை முன்வைத்து) | முனைவர் பால்சிங். ரா | BIRJT250003 | 12- 19 |
| கி. ராஜநாராயணன் சிறுகதைகள் காட்டும் கரிசல் மக்களின் வாழ்வியல் | பா. மோகனா | BIRJT250004 | 20- 22 |
| மு. மேத்தா கவிதைகளில் பெண்ணிய சிந்தனைகள் | திருமதி ரா. வசுமதி<br>முனைவர் ச. சுமதி | BIRJT250005 | 23-28 |
| ஸ்ரீ அரவிந்தரின் கல்விச் சிந்தனையும் சமுதாயப் பற்றும் | முனைவர் ம. சித்ரகலா | BIRJT250006 | 29- 35 |
| ஒப்பீட்டு நோக்கில் பட்டும் சிலம்பும் | முனைவர் ஆ. சந்திரன் | BIRJT250007 | 36-42 |
| தமிழ்மொழி: பித்தும் தெளிவும் - ஓர் அயலக நோக்கு | முனைவர் ஏ. பிரேமானந்த் | BIRJT250008 | 43- 51 |
| தமிழ்நாடகக் கலையின் தோற்றம் வளர்ச்சி | முனைவர் சு. இளவரசி | BIRJT250009 | 52- 56 |
| இலக்கியங்களில் ஆடைகள் | பெ. தீபா  முனைவர் மோ. ரூபா | BIRJT250010 | 57-60 |
| நாட்டார் மக்களின் வழிபாட்டுக் கதைகளில் தெய்வ வரலாறுகள் | முனைவர் சு.பால்பாண்டி | BIRJT250011 | 61-70 |
| சங்ககாலப் போர் அறங்களில் அடையாளப் பூக்கள் | ச. சுந்தரேசன்<br>முனைவர் மு. பாலமுருகன் | BIRJT250012 | 71-78 |
| திருவாசகம் சொல்லும் அறநெறிகள் | கவிஞர் நிர்மலா சிவராசசிங்கம் | BIRJT250013 | 79-82 |
| பாரதி வசந்தனின் தலைநிமிர்வில் தலித்தியப் பார்வை | முனைவர் கி. அய்யப்பன் | BIRJT250014 | 83-89 |
| ஜவ்வாதுமலை பழங்குடி மக்களின் கார்த்திகை விளக்கீடு | முனைவர் ரே. கோவிந்தராஜ் | BIRJT250015 | 90 - 94 |

www.boomirjt.com Volume 1, Issue1 May 2025

BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL (BIRJT)

An International open access, peer- reviewed, refereed journal

# ஸ்ரீஅரவிந்தரின் கல்விச் சிந்தனையும் சமுதாயப் பற்றும்

**முனைவர் ம. சித்ரகலா**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

ந.க.ம. கல்லூரி, பொள்ளாச்சி.

கைப்பேசி- 9842250753

மின்னஞ்சல்: chitrababu1996@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

ஸ்ரீஅரவிந்தரின் கல்விச் சிந்தனையும் சமுதாயப் பற்றும் என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வுக்கட்டுரையில் மகான்களின் பன்முக அறிவை ஆராய்ந்து தெளிந்தால் சமுதாயம் மேன்மையுறும் என்ற வகையில் ஸ்ரீஅரவிந்தரின் பன்முகத் திறன் பற்றியும், இன்றைய காலகட்டத்தில் வணிக நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கும் கல்விக் கொள்கையை மாற்றும் பொருட்டும் மாணாக்கர்களின் புரிதல் தன்மையை மேம்படுத்தும் பொருட்டும், கல்வியின் இன்றியமையாத தன்மை, தாய்மொழிக் கல்வியின் அவசியம், அனைத்து மாணாக்கர்களுக்கும் உயர்வு தாழ்வு பார்க்காத ஒருங்கிணைந்த கல்விமுறையின் அவசியம், பன்னாட்டுப் பல்கலைக் கழகத்தின் கற்பித்தல் முறையும் கற்றல் முறையும், கற்பித்தலின் நோக்கம் ஆகியவைகளைப் பற்றி ஆராய்வதோடு, ஆசிரியர்கள் எவ்வாறு சமுதாய மேம்பாட்டிற்கு உதவ வேண்டும் என்பவைகளைப் பற்றியும் ஆராய்வது இன்றைய காலகட்ட சமுதாயத்திற்கு நலம் பயக்கும் என்ற வகையில் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

**குறிச்சொற்கள்**

ஸ்ரீஅரவிந்தர், கல்விச்சிந்தனை, சமுதாயப் பற்று, ஆசிரமப் பள்ளி, புதுச்சேரி, அரவிந்தர் ஆசிரமம்

**முன்னுரை**

மானுட சமுதாயத்தை ஒரு இலக்கு நோக்கி அழைத்துச் செல்லும் உன்னத நோக்கு உடையவர்கள் சான்றோர்கள். இவர்கள் மானிட சமுதாயத்தைப் பக்குவப்படுத்தவும், நெறிப்படுத்தவும், கல்வியும் ஆன்மீகமும் சிறந்த வழி என்பதை உணர்ந்தவர்கள். அவ்வழியில் மனிதனை அழைத்துச் சென்றாலே மனிதவளம் சிறக்கும் என்றும், மனிதம் சிறந்தால் நாடு சிறப்புறும் என்றும் உணர்ந்து கல்வி கற்றலின் அவசியத்தைப் பறை சாட்டுகின்றனர். கல்வியின் வழி மனித சமுதாயத்திற்கு நல்ல வாழ்க்கைப் பாதையை அடையாளம்காட்டி அவர்களை உயர் நிலைக்கு உயர்த்துவதோடு அன்பும், அறமும், ஒழுக்கமும், நடுவுநிலையும், நல்நட்பும், உயிரிரக்கமும் மன அமைதியும் பகுத்தாயும் திறனை மேம்படுத்தி மனிதன் உன்னத வாழ்வு வாழவேண்டும் என்ற முற்போக்கு சிந்தனையாளராகத் திகழ்பவர்கள் சான்றோர்கள். அவ்வகையில் மகான் ஸ்ரீஅரவிந்தரின் கல்வி சிந்தனைகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஸ்ரீஅரவிந்தரின் பன்முக நோக்கு**

ஸ்ரீஅரவிந்தர் இந்திய சுதந்திர விழா நாளான ஆகஸ்ட் 15- இல் வட இந்தியாவில் உள்ள கொல்கத்தா நகரில் கிருஷ்ண தனகோஷ், ஸ்வர்ண லதா தம்பதியருக்கு 1872- இல் மகனாகப்பிறந்தவர். இவர் தன்னுடைய தொடக்கக் கல்வியை டார்ஜிலிங்கிலுள்ள "லோரெட்டோ கான்வென்ட்டில்" தொடர்ந்தார். லண்டனிலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில், இளங்கலை கல்வியைத் தொடங்கி பட்டமும் பெற்றார்." விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்பதற்கு ஏற்ப, படித்துக் கொண்டிருக்கும்போதே முற்போக்கு சிந்தனையாளராகவும், சிறந்த தேசிய வாதியாகவும்,

மெய்யியலாளராகவும், ஆன்மீகத்தலைவராகவும், கவிஞராகவும் தன் வாழ்வைச் சமுதாயத்திற்காக அர்ப்பணித்த பன்முக வித்தகர். இவர் சிவில் சர்வீஸ் என்கிற இந்தியக் குடிமையியல் பணிக்கான பட்டம் பெற்றவர். பிரிட்டனின் கல்லூரிப் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

இந்தியா பிரிட்டனுக்கு அடிமையாக இருந்த நிலை அறிந்து இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தில் சேர்ந்தார். இந்திய அடிமை நிலையை அகற்றி வெளியேற வேண்டும் என்று எண்ணினார். சிறிது காலம் காங்கரஸ் இயக்கத்தில் தலைவராக இருந்தார். இவர் எந்த கருத்துக்களையும் செயல்களையும் நேரடியாக முன்வைக்காமல் மறைமுகமாக தன் கருத்துக்களை வெளியிட்டார். 1906-ஆம் ஆண்டு வங்காளம் சென்றார். அப்போது வங்கப் பிரிவினை இவரின் மனதை வெகுவாக பாதித்தது. அதன் பிறகு இவர் அலிப்பூர் குண்டு வெடிப்பில் ஓர் ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்த அவருக்கு கிருஷ்ண அருளால் ஈர்க்கப்பட்டு ஆன்மீக ஈடுபாட்டில் மனதை செலுத்தினார்.

1910-ஆம் ஆண்டு புதுச்சேரியில் கர்மயோகி என்ற நாளிதழை ஆரம்பித்து அதில் தன்னுடைய கருத்துக்களை விதைத்தார். மேலும், ஆன்மீக சம்பந்தமான ஆர்யா என்ற மாத பத்திரிக்கையையும் வெளியிட்டார். இவர் சிறந்த கோட்பாடுகளையும், தத்துவங்களையும், சித்தாந்தங்களையும் வெளியிட்டார். ஆரம்ப கால கட்டத்தில் இவரின் சித்தாந்தங்களையும் வேத தத்துவங்களையும் கேட்பவர் சிலரே இருந்தனர். காலப் போக்கில் இது பலவாக பெருகியது.

மீரா அல்ஃபாஸா என்ற பெண்மணி அனைத்து திறமையும் உடையவராகத் திகழ்ந்தார். இவரை திறன்மிகு குழந்தை(Gifted child) என்று குறிப்பிடலாம். இவரின் அறிவுத் தேடல், உள்ளுணர்வைத் அறியும், ஆர்வம் போன்ற பண்புகளை உடையவராக இருந்தார். தன்னுடைய தேடலை அறிந்தவர் ஸ்ரீஅரவிந்தர் என்பதை உணர்ந்து 1916- இல் தன் கணவரோடு அரவிந்தரைச் சந்தித்தார். கருத்துகள் ஒன்றி அமைய அரவிந்தரை தனது ஞான குருவாக ஏற்றுக்கொண்டு அவரோடு தங்கி அவருடைய கருத்துக்களையும் போதனைகளையும் கனவையும் மெய்ப்படத் துணையாக இருந்தார். இவர் அன்னை என்று அன்பாக அழைக்கப்பட்டார். இவர் ஸ்ரீஅரவிந்தரின் புதிய கல்விக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் ஏற்படுத்தி, கல்விக் கேள்விகளில் உலகம் உய்ய வழிவகைசெய்ய உறுதுணையாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**கல்வி**

கல்வி என்பது குழந்தைகளின் அறிவு மற்றும் மன வளர்ச்சிக்கும், சிந்தனைத் திறன் மேம்பாட்டிற்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும், பயன் உடையதாக அமைவதே. "கல்வி என்னும் சொல்லிற்கான ஆங்கிலச்சொல் Education என்பதாகும். இந்தச் சொல் education என்ற இலத்தின் மொழிச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இந்த education சொல்லானது வளர்த்தல் என்ற பொருளைக் குறிக்கிறது. மேலும் இது கற்பித்தல்>பயிற்றுவித்தல் என்னும் பொருளைத் தரும் educo என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டது." (செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் பேரகரமுதலி, ப. 504) என்று விளக்கம் அளிக்கின்றது. "கல்வி என்னும் சொல், கல் என்னும் முதனிலையினின்று தோன்றியதாகும். கல்லுதல், தோண்டுதல். மாந்தன் முதன் முதற் கற்ற கல்வி உழவுத் தொழிலாதலால் இகல்வி என்னும் சொல் முதலில் உழவுத் தொழிலையே குறித்திருத்தல் வேண்டும் இது ஆங்கிலத்தில் நிலப் பண்பாட்டையும் உளப் பண்பாட்டையும் ஒருங்கே உணர்த்தும் Culture, Cultivation என்னும் இரு சொற்களும் Col என்னும் ஒரே இலத்தின் வேர்ச் சொல்லினின்று தோன்றியிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது. கல்- col – culture" (ப. ந. பஃப. 111) என்று மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் குறிப்பிடும் கல்வி பற்றிய கருத்தை அறிய முடிகின்றது.

**கல்வியின் இன்றியமையாமை**

கல்வி ஒருவருக்கு கண் போன்றது. கல்வி இல்லாதவன் கண் இருந்தும் குருடன் போன்றவன். கல்விச் செல்வமே ஒருவருக்கு பெரும் செல்வம் என்பதை,

> கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
> மாடல்ல மற்றை யவை (குறள். 400)

என்று வள்ளுவ பெருந்தகையும்,

மன்னனு மாசறக்கற் றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்- மன்னற்குத்
தன் தேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற விடமெல்லாம் சிறப்பு. (மூதுரை. பா. 26)

என்கிறார் ஔவைப் பிராட்டியும்

நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே (வெற்றிவேற்கை,பா. 35)

என்று அதிவீரராமபாண்டியரும் எடுத்தியம்புகின்றனர். மேலும் "பெற்ற பிள்ளை கைவிட்டாலும் கற்ற கல்வி கைவிடாத என்கிறார் மகாத்மா காந்தியடிகள். இந்த உலகையே மாற்றக் கூடிய ஒரு பலமான ஆயுதம் உண்டு அது தான் கல் என்கிறார் தென்னாப்பிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா. படிப்பால் மட்டுமே பாரதத்தைப் பாராளச் செய்யலா என்றார் டாக்டர் அப்துல்கலாம். இவ்வாறு அறிவிற் சிறந்த புலவர்களும், அறிஞர்களும் மேதைகளும் கல்வியி இன்றியமையாமையைப் பறை சாற்றுகின்றனர்.

கல்வி ஒருவர்க்குக் கண் போன்றது. அக்கல்வியை எப்படிக் கற்பது. பொருள் தேடும் நோக்கத்தோடு கற்பதா அறிவைப் பெருக்க கற்பதா? தாய்மொழியில் கற்பதா? பிற மொழியில் கற்பதா? என்ற கேள்வி எழும். இன்றை சூழலில் நம்மில் பலர் தாய் மொழியில் கல்வியா? தாய் மொழியான தமிழில் பேசுவதே தரக்குறைவு என்றும் கேவ என்றும் தாய் மொழிக் கல்வியில் படிப்பது சிறப்பன்று என்றும், ஆங்கில வழி கல்வியில் படிப்பதே சிறப்பைத் தரும் என் ஆங்கில மோகத்தில் பணம் அதிகம் வசூலிக்கும் வணிகச் சந்தைகளாகத் திகழும் பள்ளிகளை நாடி செல்வதே மட்டுமல்லாமல், அவர்களுடைய கனவே, Talk in English, Walk in English, Sleep in English என்ற ஆங்கி வார்த்தையைத் தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்கின்றனர். இச்சூழலில் எம் மொழியில் கல்வி கற்றால் சிறப் பகுத்தறியும் சிந்தனையும், படைப்பாக்கத் திறனும் மேம்படும். வாழ்வியல் முன்னேற்றத்திற்கும், சமுதா முன்னேற்றத்திற்கும் எவ்வகையில் கற்றல் பயன் அளிக்கும் என்பதை ஆய்ந்த வல்லுநர்கள் அவரவர் அன்னை மொழியாகிய தாய் மொழியில் கற்கும் மொழி அறிவு பெற்றால்தான் சமூகத்துடன் இணக்கமாக வாழ முடியும் என்ப திருவள்ளுவப் பெருந்தகை,

நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று (குறள் – 641)

என்று பாடியுள்ளார். தாய்மொழிக் கல்வி அவசியம் என்பதை கொள்கையாகவே பரப்பியவர் மகான் ஸ்ரீஅரவிந் அவரின் கல்விக் கொள்கையையும் சமுதாயப் பற்றும் சமுதாயத்தை ஏற்ற தாழ்வின்றி வாழ வழிவகுத்தது எனலாம்.

**மொழிக் கொள்கை**

மொழி நமது இருகண்கள். மொழி இழந்தவன் ஊமையாகிறான். மொழி வழி உலகைக் காண்ப உன்னதமாகிறான். மொழியைத் தன் தாய் மொழிவாயிலாகக் கற்றுக் கொள்ளும்போது மட்டும்தான் புரிதல் திறனு சிந்தனைத் திறனும் வளரும். ஒரு வளமான நாட்டுக்கு அடிப்படையாக அமைவது வளமான கல்விமுறை. அக்கல்வி அவரவர் தாய் மொழியில் கற்றலே சிறப்பை நல்கும் எனலாம். கல்வியைக் கற்றுக் கொடுக்கும் நோக்கமே மாணவனின் சிந்தனை ஆற்றலை வளர்ப்பதும், படைப்பாக்கத்திறனை மேம்படுத்துவதும், நாகரிகமான சமுத முற்போக்குச் சிந்தனையுடைய மனிதராக மாற்றுவதும், சமுதாயப் பண்பாட்டையும், மரபுவழி வந்த உன்னதங்க மேன்மையுறச் செய்வதுமே எனலாம். ஆக அன்னை மொழியில் கற்கும்போது சிந்தனைத் திறன் மேம்பட்டு சமுத முன்னேற்றம் ஏற்படும் என்ற கருத்தாளுமை உணர்தல் வேண்டும்

கல்வி என்பது அனைவருக்கும் புரியும் வகையில் அமைதல் வேண்டும். கற்றவற்றை வெறும் மனனம் செ தேர்வு எழுதுவதும், மதிப்பெண் பெறுவதும் மட்டும் கல்வி அல்ல. கற்ற கல்வியால் நல்வழியில் சமுதாய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். ஆகவே கல்வி அவரவர் தாய்மொழியாகிய அன்னை மொழியில் அமைய வேண்டும் என்பதை ஸ்ரீஅரவி வலியுறுத்துகின்றார்.

அன்னை மொழிக்கு உரிய இடத்தைத் தருவதுடன் அம்மொழியை மதிக்கும் உணர்வும் வேண்டும் என்று கருதுகின்றார். இவரின் கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளும் வகையில் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் "ஒரு குழந்தைக்குத் தாய்ப்பால் எப்படியோ அதைப் போன்றது அவர்களது அன்னை மொழி. அன்னை மொழி என்ற ஆற்றில் சென்றால் அறிவு என்னும் கடலை அடையலாம்" என்று தாகூர் கூறுகின்றார்.

மேலும், அன்னை மொழியின் வழி கல்வி கற்பதன் மூலம், "நல்ல உயிர்த் துடிப்பான இலக்கியம், வரலாறு போன்றவற்றை உருவாக்கவும் கற்கவும் அன்னை மொழியே சிறந்த ஊடகமாகத் திகழும். மாறாக எழுத்துக் கூட்டி வாசித்து அகராதித் துணை நாடுதல் கல்வியின் ஆற்றொழுக்கத்தைத் தடை செய்யும். அன்னை மொழி தவிர்த்த ஏனைய ஊடகம் வெறும் முட்டாள் தனமான முயற்சியாகும். விரைவான வளர்ச்சிக்குக் குழந்தையை இட்டுச் செல்ல அவனையும் அவனைச் சூழவுள்ளவற்றையும், அவனுக்கு முன்னைகால கட்டத்தையும், எதிர்கொள்ளும் காலங்களையும் அன்னை மொழியையும் அறிமுகம் செய்துவைக்க வேண்டும். உள மாட்சியை மேம்படுத்தும் கதை, கட்டுரைகள் அன்னை மொழிமூலம் அறிமுகம் செய்து வைக்கப்பட வேண்டும். வரலாறு, தத்துவம், விஞ்ஞானம், கலை போன்ற பாடங்களைக் கற்பதற்கான அஸ்திவாரத்தை அன்னை மொழிமூலம் சரியாக அமைத்துக் கொள்ள வேண்டும். எழுத்தாற்றலை வளர்ப்பதற்கு இது சிறந்த ஊடகமாகும். கதை கேட்கும் உணர்வை வீர வணக்கங்களைக் குழந்தைகள் விரும்புவார்கள். அந்த நேரத்தில் அவர்களுக்கு ஆசிரியர்கள் அவற்றை அறிமுகஞ்செய்து வைக்க வேண்டும். விடயத்தை முதலிலே தெரிந்து கொள்ளட்டும் பின்பு அவனிடத்திற் பகுப்பாய்வு ஆற்றல் வளரும். எனவே உடலுக்கும் உள்ளத்திற்கும் தீங்கிழைக்காத உண்மையான விளக்கத்துடன் கூடிய கல்வியைக் குழந்தை பெறுவதற்கு அன்னை மொழியே சிறந்த ஊடகம். முருகியல் உணர்வுகூட அன்னை மொழி மூலம் தான் சிறப்பாக வளர்க்கவும் வெளிக்கொரணவும் முடியும்." (Aurobindo ashram, sri aurobindo and the mother on education. PP.33-34) என்கிறார் மகான் ஸ்ரீஅரவிந்தர். அரவிந்தரின் இக்கொள்கையை தற்கால அறிவியலாளர்களும் அறிஞர்களும் ஆய்ந்து தெளிந்துள்ளனர். குழந்தைகளுக்கு புரியும் வகையில் அமையும் பாடமே சிந்தனை திறனையும், பகுத்தறிவையும் வளர்க்கும். இதன் வழி படைப்பாக்கத் திறன் வளர்வதோடு சமுதாயமும் நாடும் மேன்மையுறும் என்பது கண்கூடே எனலாம்.

**ஒருகிணைந்த கல்விமுறை**

ஒருகிணைந்த கல்விமுறை என்பது ஒட்டு மொத்த உலகம் முழுவதும் ஒரே கல்வி என்பதாகும். அதாவது குழந்தைகளிடம் உயர்வு, தாழ்வு, ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் ஒரே கல்விமுறை வேண்டும் என்பதை வலியுறுத்தினார். மாணவர்களுக்கு கல்வி கற்க சுதந்திரம் தேவை. இதைபடி, அதைப்படி என்றும் பெற்றோர்களின் கனவுகளைக் குழந்தைகளின் கனவாகத் திணிப்பதும் இல்லாமல், அவரவர்கள் விருப்பப்படி, அவரவர்களுக்கு என்ன தேவையோ அதை படிக்க வேண்டும். கட்டாயப்படுத்தி கல்வியைப் புகுத்தக் கூடாது என்று வலியுறுத்துகிறார். இதன் அடிப்படையில் ஆசிரமப்பள்ளி ஆரம்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆசிரமப் பள்ளி**

1943- ஆம் ஆண்டு ஆசிரம பள்ளி உருவாக்குதல். மேலும், ஆசிரமக் கல்வி போலவே மகான் அரவிந்தரின் கல்விக் கனவை நினைவாக்க 1952- இல் அரவிந்தோ சர்வதேச பல்கலைக்கழகத்தைப் பாண்டிச்சேரியில் அன்னை அவர்கள் நிறுவுகிறார். இப்பன்னாட்டுப் பல்கலைக் கழகத்திற்கு யார் வேண்டுமானாலும் கல்வி பயிலலாம். காலையும் மாலையும் தியானப் பயிற்சி மற்றும் உடற்பயிற்சி, விளையாட்டு ஆகியவை நடைபெறும். இங்கு எளிய உணவு, சீரான உணவு வழங்கப்படும். இது ஒரு குருகுல கல்வி ஆகும். இங்கு பயிற்றுவிற்கும் ஆசிரியர்களுக்கு ஊதியம் இல்லை. மாறாக வேலை செய்பவருடைய குடும்பத்திற்கு உணவு, உறைவிடம் இலவசமாக வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட சமய போதனை என்பது இங்கு இல்லை. மாணவர்கள் தங்களின் விருப்பத்திற்குஏற்ப எந்த பாடங்களை வேண்டுமானாலும் கற்கலாம். எவ்வளவு வேண்டுமானாலும் கற்கலாம். அவரவர் அவர்களுடைய கற்கும் திறனின் வேகத்திற்கு ஏற்ப கற்பித்தல் நடைபெறும்.

கற்றல் என்பது யாராலும் உற்பத்தி செய்ய முடியாது. ஒருவர் மனதிலிருந்து வரக்கூடியது. கல்வி கல்விக்காகவே "Education for Education. Safe nothing can be taught but caught" என்று குறிப்பிடுகின்றார். ஆங்கிலம், பிரான்சு, வடமொழி,

தாய்மொழி, ஐரோப்பிய மொழிகள் போன்ற எந்த மொழிகளில் வேண்டுமானாலும் பாடங்களைக் கற் இங்கு படிக்கும் மாணவர்கள் விருப்பப்படி படிக்கலாமே தவிர இவர்கள் படித்த பாடத்திற்கான சான்றி மாட்டாது. சிறியவர் முதல் பெரியவர்வரை யார் வேண்டுமானாலும் அங்கு சென்றுப டிக்கலாம். கிடையாது. மகான் ஸ்ரீஅரவிந்தரின் நோக்கமே உலக மக்கள் அனைவருக்கும் ஒருங்கிணைந்த உ ஏற்படுத்துவதோடு அறிவியல் சார்ந்த பாடங்களைக் கற்றுக் கொடுத்து, அறிவியல் வளர்ச்சியையு வளர்ச்சியையும் அறிந்து கொள்ள வேண்டும் என்று கருதுவார். இதனை, தொல்காப்பியர்,

"மறுவில் செய்தி மூவகைக் காலமும்

நெறியி னாற்றிய அறிவன்" (தொல்.புறத்திணை.1020.3-4)

என்று கூறுவதில் அறிவன் என்பது வானியலையும் நிலவியலையும் நன்கு தெளிந்து அறிந்த அறிவியல் அற கொள்ளலாம். இவ்வாறு வாழும் இடத்தையும் சூழலையும் தெளிவாக அறிதல் போல கற்ற கல்வியையும் கற்றல் இன்றியமையாதது என்பது ஸ்ரீஅரவிந்தரின் கல்விக் கொள்கை எனலாம்.

**கற்கும் முறை**

கல்வி கற்றுக் கொடுக்கும் போது ஒரே முறையை பின்பற்றி கற்பித்தால் அது அனைத்து மாணவ புரியும் என சொல்ல முடியாது. மாணவர்களின் கற்கும் திறனுக்கு ஏற்ப கற்பித்தல் முறை அமைய வேண்டும். பவணந்தி முனிவர்,

"அன்ன மாவே மண்ணொடு கிளியே

இல்லிக் குடமா டெருமை நெய்யரி

அன்னர் தலையிடை கடை மாணாக்கர்"(நன்னூல், 38)

என மாணவர்களை முதல் நிலை மாணாக்கர், இடைநிலை மாணாக்கர், கடைநிலை மாணாக்கர் என மூன்று நிலை பிரித்துக்காட்டி விளக்குகின்றார். அதுபோலவே மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்பவும் புரிதல் திறனுக்கு ஏற் மூன்று முறைகளில் கல்வி கற்கும் முறை அமைந்துள்ளது. 1. விரிவான முறை 2. வினா வரிசை முறை 3. தி முறை(மனதை ஒரு நிலைப் படுத்துதல்) என்ற முறையில் கற்பித்தல் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கல்வி என்பது கடந்த காலத்தைப் பற்றி மட்டும் கற்பதன்று. நிகழ்கால தேவைக்கு தயார்படுத்துவதே ஆகும். அதா முடிந்த செயல் பயனற்றது என்றும் எதிர்கால இலட்சியத்தை அடைய என்ன தேவை என்பதை உணர்ந்து படித்த சிறப்பு. நல்ல குடிமைப் பண்பினை வளர்ப்பது கல்வியின் தலையாய கடமையாகும். இது ஒழுக்கத்தின் மேன்மை நிலை நாட்டுகின்றது. "கல்வியின் உண்மையான அடிப்படை மன ஆராய்ச்சியே எனலாம். மனம் நான்கு பகுதிகளை கொண்டது.

1. கடந்த கால நினைவாற்றல்கள்
2. ஐந்து புலன்களின் வழியாக பெறும் உணர்வும், அறிவும்
3. நுண்ணறிவு- அறிவு கூறுகளில் மாற்றியமைக்கவும் திருத்தி அமைக்கவும் ஏற்புடைய வழிவகை செய்தல்.
4. உண்மையை உண்மையாக ஆராய்ந்து அறிதல்"

என இவ்வகைச் சித்தாந்தங்களின் அடிப்படையில் கல்வி அமைய வேண்டும் என்று கருதுகின்றார்.

கவனக்குவிப்பு(Concentration) ஆராய்ந்தறிதல்(Reasoning) ஆகியவற்றைப் பெற கல்வி பயன்பட வேண்டும். அதாவது மாணவர்கள் கற்கும்போது என், எதற்கு என்ற கேள்விகளோடு சுதந்திரமாகச் சிந்தித்து ஆராய்ந்து அறிதல் வேண்டும். அவ்வாறு ஆராய்ந்து தேடித் தேடிக் கற்றால் ஒரு சிறந்த விஞ்ஞானியாக, அறிவியலாளராக உருவாக எதுவாக அமையும்.

கல்வியானது ஆன்மா விடுதலையும், பொருள்சார்ந்த வாழ்க்கை வளத்தையும் பெற்றுத்தர உதவுதல் வேண்டும் என்கிறார் மகான் ஸ்ரீஅரவிந்தர். இவரின் தத்துவத்தை சுவாமி விவேகானந்தர், "கல்வி என்றால் என்ன? அது புத்தகங்களைப் படிப்பதா? இல்லை. அல்லது அது பல் விதமானவற்றைக் குறித்த அறிவா? அதுவும் இல்லை. எத்தகைய

பயிற்சியின் மூலம் மனவுறுதியின் வேகமும் அதன் வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, பயன் தரு வகையில் அமைகிறதோ, அந்தப் பயிற்சிதான் கல்வியாகும்" என்கிறார். மகான் அரவிந்தரின் கல்விச் சிந்தனை இதுவே என்பதை உய்த்துணர முடிகின்றது. மேலும் ஸ்ரீ அரவிந்தர்,

1. எதையும் யாருக்கும் கற்பிக்க முடியாது. அவரவர் தானே விரும்பி கற்க வேண்டும். ஆசிரிய மாணவர்களின் கற்றலுக்கு உதவுவரே.
2. மனமே அறிவு வளர்ச்சிக்கான சாதனம். ஆசிரியரின் முதல் பள்ளிக் குழந்தைகளுக்குச் சரியான புலப்பயிற்சி அளித்தல். புலப் பயிற்சியின் வழி உடல் வளர்ச்சிக்கு தூண்டுதல் அளிக்க வேண்டும்.
3. தெரிந்தவற்றிலிருந்து அறியாதவற்றிற்குச் செல்லல். அதாவது அருமைக்குப் பின்னரே தொலைவை நோக்கல் ஆகியவை கல்வி போக்காக அமைய வேண்டும்.

என்கிறார். ஸ்ரீஅரவிந்தரின் கல்விக் கருத்துக்களையும் வாழ்க்கைத் தத்துவங்களையும் நடைமுறைப் படுத்தி வ காட்டுவதற்கு இன்று புதுவையில் அரவிந்தர் ஆசிரமம் இயங்கி வருகின்றது. அரவிந்தர் வலியுறுத்திய அனைத்துல ஆன்மீக ஒருமைப்பாட்டினுக்கு எடுத்துக்காட்டாக அங்கு தற்பொழுது இயங்கிவரும் '**ஆரோவில்**' நகரம் விளங்குகின்றது.

**ஆசிரியர்கள்**

ஆசிரியர்கள் மாணவர்களோடு நேரடித் தொடர்பு உடையவர்களாகவும், வழி நடத்துபவர்களாகவும், சாதி பேதமில்லாத நல்ல நட்பு உடையவராகவும் இருத்தல் வேண்டும் என்பார் மகான் ஸ்ரீஅரவிந்தர். ஆசிரியர் மாணவ நேரடி தொடர்புடன் இருக்க வேண்டும் என்ற கருத்தை சுவாமி விவேகானந்தர், "குருகுல முறையில் ஆசிரியனோ நேரடியாகத் தொடர்பு கொண்டு பயிற்சி பெறுவது தான் சிறந்த கல்வி முறை என்பது எனது கருத்து" என்றும், ஆசிரிய வாழ்க்கை ஒரு முன்மாதிரியாக அமையாமல் எந்த விதக் கல்வியையும் பெற முடியாது" என்றும் கருதுகின்றார். மேலு ஆசிரியர் என்பவர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை நன்னூல் "ஆசிரியர் என்பவர் அறிவால், அன்பால், அருளா கல்வியால், கருணையால், கனிவால், பண்பால், பழக்கத்தால், பொறுமையால், பெருமையால், மேலும் பலவற்றாலு சிறந்து விளங்குபவராக ஓர் ஆசிரியர் இருத்தல் வேண்டும். அத்தகைய ஆசிரியரே மாணவர்களின் சிறந்த மு மாதிரியாகத் திகழ்பவர் என்றும் பிறரால் அறிய முடியாத கல்விப் பெருமையைக் கொண்டிருக்கிற ஆசிரியர்கள், பிறரா முழுமையாக உணர்ந்து கொள்ள முடியாத நிலத்துடன் ஒப்பிடப்படுவதை,

"தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்
பருவம் முயற்சி அளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே"

என்று நன்னூல் விளக்கம் அளிக்கின்றது. இதன்வழி ஆசிரியர் என்பவர் மாணவர்களின் அறிவ விரிவுபடுத்துபவர்களாக இருத்தல் வேண்டும் என்றும் ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு கூடாது என்று வலியுறுத்துவது ஈங்கு குறிப்பிடத்தக்கது.

**தொகுப்புரை**

கல்வி கல்விக்காகவே என்ற முழக்கத்தை அன்று முதல் இன்றுவரை முழங்குகிறோம். கல்வி அவசி என்கிறோம். ஆனால், கல்விக் கூடங்கள் கல்விக்காக மட்டும் தான் இயங்குகின்றதா? வணிக நோக்கம் அ இல்லையா என்பது சிந்திக்கத் தக்கதாகும். மேடை பேச்சிற்கு மட்டும் அனைவருக்கும் சமமான கல்வி என்றும் படிப ஏழை, பணக்காரர் பாகுபாடு கூடாது என்றும் பேச்சளவில் இல்லாமல் செயல் முறையில் அத்தகைய நாட்டமும் ஊக்க உணர்வும் காட்டவில்லை என்பதை,

"கூட்டத்தில் கூடிநின்று கூடிப்பிதற்றல் இன்றி
நாட்டத்தில் கொள்ளாரடி - கிளியே
நாளில் மறப்பாரடி" (பாரதியார்கவிதைகள், பா. 58)

என்று பாரதியார் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் கூறிய கூற்று இன்றும் மெய்யாகவே உள்ளது. 'சொல்வது ஒன்று செய் ஒன்று' என்பது இன்றைய வழக்கமாகி விட்டது. ஆனால் மகான் அரவிந்தர் மனதளவில் நினைத்ததை செயல் முறைப்படுத்தினார்.

இன்றும் அவர் கனவை நினைவாக்கிய ஆரோவில் பெங்களூரில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மகான் அரவிந்தரின் உலகளாவிய கல்விச் சிந்தனையைப் போற்றுவோம்.....! சிந்திப்போம்.....! செயல்படுவோம்......!

**துணைநூற் பட்டியல்**


1. மகான் அரவிந்தர் கண்ட கல்விச் சிந்தனைகள், **என்.கே.தர்மலிங்கம், தமிழ்த் தென்றல் வெளியீடு, 1வதுபதிப்பு, 2017.**
2. திருக்குறள், பரிமேலழகர், திருமகள் நிலையம், விசா பப்ளிக்கேஷன்ஸ், பதிப்பு 2015,
3. நன்னூல், சாமிநாத ஐயர், வைஜெயந்தி அச்சுக்கூடம், சென்னை, 1918
4. பாரதியார் கவிதைகள், சி. சுப்பிரமணிய பாரதி, விகடன் பிரசுரம், அண்ணா சாலை, சென்னை – 600 002.
5. மகான் அரவிந்தர் கண்ட கல்விச் சிந்தனைகள், என். கே. தர்மலிங்கம், பரணி அச்சகம், நெல்லியடி, 2017.
6. விவேகானந்தர் பொன்மொழிகள், ப்ரியா பாலு, ஏகம் பதிப்பகம், சென்னை 2019.
7. செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் பேரகரமுதலி, பு.ஏ. இராமைய்யா இ.,ஆ.,ப., இயக்கக வெளியீடு, 2015



### Funding

No funding was received for conducting this study.


### Conflict of Interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.